අභ්‍යන්තර කටයුතු, වයඹ සංවර්ධන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
Ministry of Internal Affairs, Wayamba Development & Cultural Affairs

ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்
DEPARTMENT OF IMMIGRATION & EMIGRATION

"සුහුරුපාය" ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சுகுறுபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
"Suhurupaya", Sri Subhuthipura Road, Battaramulla, Sri Lanka
E-mail: controller@immigration.gov.lk

තැ.පෙ. / த.பெ. இல. / P.O. Box: 586

මගේ අංකය / எனது இல / My No.: DIE/TRA/01/ශ.බ/1

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2018.01.10

அமைச்சுச் செயலாளர்கள் மற்றும்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் அனைவருக்கும்,

இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்களை இற்றைப்படுத்தல் - 2018

இராஜதந்திர கடவுச்சீட்டுகளை விநியோகிப்பது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2016.10.04 ஆம் திகதிய CSA/1/38 ஆம் இலக்கக் கடிதத்தின் மீதும், உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை விநியோகிப்பது தொடர்பில் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள 2016.08.15 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 4 ii, 4 iii பந்திகள் மீதும் தயவுகூர்ந்து தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அதற்கமைய, தங்களது சிபாரிசின் பேரில் அல்லது தங்களுக்குக் கீழுள்ள திணைக்களங்களின்/ நிறுவனங்களின் தலைவர்களின் சிபாரிசின் பேரில் இராஜதந்திர கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு, எனினும் தற்சமயம் இராஜதந்திர கடவுச்சீட்டுகளை வைத்திருப்பதற்கான தகைமையை இழந்திருக்கின்ற நிலையில், இராஜதந்திர கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்களை/ தகவல்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவ இல. 01 இன் ஊடாகவும், அதே போன்று உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு, எனினும் தற்சமயம் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்பதற்கான தகைமையை இழந்திருக்கின்ற நிலையில், உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்களை/ தகவல்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவ இல. 02 இன் ஊடாகவும், 2018 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

03. இது தொடர்பில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை பெரிதும் மெச்சுகின்றேன்.

ஒப்பம்
எம்.என். ரணசிங்ஹ
கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்.

பிரதி:

1. ஜனாதிபதி செயலாளர் - தயவுகூர்ந்து தகவலுக்காக.
2. செயலாளர், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு. - தயவுகூர்ந்து தகவலுக்காக
3. கணக்காய்வாளர் அதிபதி. - - தயவுகூர்ந்து தகவலுக்காக

படிவ இல. 01

இராஜதந்திர கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்களை/ தகவல்களை இற்றைப்படுத்தல் - 2018

இராஜதந்திர கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ள, எனினும் தற்சமயம் இராஜதந்திர கடவுச்சீட்டுகளை வைத்திருப்பதற்கான தகைமையை இழந்திருக்கின்ற நிலையில், இராஜதந்திர கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்கள்

அமைச்சின்/ மாகாண சபையின் பெயர்: .....

தொடர் இல.	இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருப்பவரின் பெயர்	கடவுச்சீட்டு இல.	வகித்த பதவி	பதவியை வகித்த திணைக்களம்/ நிறுவனம்/ வெளிநாட்டுத் தூதரகம் அல்லது பிற சேவை நிலையம்	இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருப்பதற்கான தகைமை இழக்கப்பட்ட திகதி

மேலே விபரிக்கப்பட்ட இராஜதந்திர கடவுச்சீட்டுகளை இரத்துச் செய்வதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

திகதி:

.....

செயலாளர்

(உத்தியோகபூர்வ முத்திரை)

படிவ இல. 02

உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்களை/ தகவல்களை இற்றைப்படுத்தல் - 2018

உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ள, எனினும் தற்சமயம் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்பதற்கான தகைமையை இழந்திருக்கின்ற நிலையில், உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்கள்

அமைச்சின்/ மாகாண சபையின் பெயர்: .....

தொடர் இல.	உத்தியோகபூர்வ கடவுச்சீட்டை வைத்திருப்பவரின் பெயர்	கடவுச்சீட்டு இல.	வகித்த பதவி	பதவியை வகித்த திணைக்களம்/ நிறுவனம்/ வெளிநாட்டுத் தூதரகம் அல்லது பிற சேவை நிலையம்	உத்தியோகபூர்வ கடவுச்சீட்டை வைத்திருப்பதற்கான தகைமை இழக்கப்பட்ட திகதி

மேலே விபரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை இரத்துச் செய்வதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

திகதி:

.....

செயலாளர்

(உத்தியோகபூர்வ முத்திரை)